**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 216-2022**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW 8 | | | Examined as : PW 6 | |
| Name | : | Dr. S. வினோத் | Defence | : |
| Father/Husband Name | : | செல்வராஜ் | Court | : |
| Village | : | இணை பேராசிரியர், விநாயகா மிஷன் மருத்துவமனை, காரைக்கால் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 38/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 10.03.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

3வது எதிரி இறந்துவிட்டார். 1, 2, 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் காரைக்கால் விநாயகா மிஷனில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.08.2020ம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் நான் மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது சுசீலா மற்றும் அனுசியா ஆகிய இருவரையும் கலையழகன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அப்போது சுசீலா மற்றும் அனுசியா சுயநினைவுடன் காணப்பட்டார்கள். அவர்களை நான் விசாரித்த போது அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் அடையாளம் தெரிந்த 4 நபர்கள் அனுசியா மற்றும் சுசீலாவை அவர்களது வீட்டில் வைத்து இரும்பு பைப் மற்றும் கையால் தாக்கியதாக கூறினார்கள். அவர்களை நான் பரிசோதித்த போது சுசீலா மற்றும் அனுசியாவிற்கு வெளிகாயங்கள் எதுவும் இல்லை. அவர்கள் உடல் வலி இருப்பதாக கூறினார்கள். அவர்களை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் நான் வழங்கியது தான். அந்த **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசாஆ 4 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இரும்பு பைப்பால் தாக்கியிருந்தால் எலும்பு முறிவு, கிழிந்த காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. வீக்க காயம் எதுவும் காணப்பட்டதா என்றால் இல்லை. சாதாரணமாக தடுமாறி கீழே விழுந்தால் உடல்வலி ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது.